**தலைப்பு 07 – நீதிச் சேவை ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிரந்தன.

## 2 நிதி மீளாய்வு

## 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்பட்டுகிறது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 03/2021 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.1 ஆம் பிரிவு | - | சிகாஸ் வெப்தள முறைமையில் 2021 திசெம்பர் 31 இல் பெறப்பட்ட பரீட்சை மீதி நிதிக் கூற்றுக்களில் இணைக்கப் பட்டிருக்க வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் | தவறுதலாக 2021 திசெம்பர் மாதத்திற்கான பரீட்சை மீதி நிதிக் கூற்றுக்களில் இணைக்கப் பட்டிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மாதத்திற்கான பரீட்சை மீதியே சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்ககப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டில் மற்றும் கடந்த வருடங்களில் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுருக்க அறிக்கைக்ககாக 2022 யூன் 09 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த பதில் கடிதத்தில், , கௌரவ சட்டமா அதிபரின் AG/28/2016 ஆம் இலக்க மற்றும் 2016.09.27 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஒட்டுமொத்த நீதிமன்ற அமைப்பிற்கு மற்றும் நீதிமன்றங்களின் சுதந்திரத்தைப் பாதிக்கும் விடயங்கள் அதில் அடங்குவதால் அவ்வறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க முடியாதென்பது குறிப்பிடப்பட்டிருந்தது. | ஒட்டு மொத்த நீதிமன்ற அமைப்பிற்கும் உரிய மற்றும் நீதிமன்றங்களின் சுதந்திரத்தை நேரடியாகப் பாதிக்கும் விடயங்களை கொண்டிருப்பதால் கௌரவ கௌரவ சட்டமா அதிபரின் AG/28/2016 ஆம் இலக்க மற்றும் 2016.09.27 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் எமது செயலாற்றுகை அறிக்கையை கணக்காய்வு அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட முடியாதென்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவிற்கு உரித்தான மோட்டார் வாகனமொன்று 4 வருட காலமாக விளைவற்றதாகக் காணப்பட்டது. | இம் மோட்டார் வாகனம் மூன்று சந்தர்ப்பங்களில் அகற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தும், வாங்குபவர் ஒருவர் சமர்ப்பிக்காமையால் அகற்றப்பட முடியாதிருந்தது. 2021.04.23 இல் பெறப்பட்ட நிலைமைப் பரிசோதனை அறிக்கையிலும் மோட்டார் வாகனம் அப்புறப்படுத்துவதற்கு உகந்தென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022.03.07 இல் நடாத்தப்பட்ட டென்டர் குழுவினால் முறையான பெறுகை நடைமுறையின் கீழ் அப்புறப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது வரையில் அம் மதிப்பீட்டுக்குழுவை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவப் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் 4 வருடத்திற்கு அதிக காலமாக ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 185,000 ஆன மீதியொன்று காணப்பட்டது. | குறிப்பிட்ட கடன் மீதிக்குரிய உத்தியோகத்தர் 2017.07.12 ஆந் திகதியிலிருந்து சேவையிலிருந்து விலகியதாகக் கருதப்படுகின்றது. அக்கடன் மீதியை அறவிடுவதற்கு அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2019 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடன் மீதி விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 யூலை 18 ஆந் திகதிய DMS/1021/VOL 1 ஆம் இலக்க முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் நீதிச்சேவை ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவுவதற்காக பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதி 2022 ஏப்ரல் 06 ஆந் திகதி வரை உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலகம் தற்காலிக கட்டிடத்தில் இயங்கி வருகின்றமையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணிக்காக போதியளவு இடவசதி காணப்படாமையால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. எனினும் நிதிப்பிரமாணம் மற்றும் குறிப்பிட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிறுவனத்தில் நிதி ஒழுக்கம் முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) <u>பதவியணி வெற்றிடங்கள் மற்றும் மிகை</u> | | |
| (i) ஆணைக்குழுவின் பதவியணி தகவல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் 48 வெற்றிடங்கள் காணப்பட்டன. அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 41 சதவீதமாகும். | 2021.12.31 இல் நீதிச் சேவை ஆணைக்குழுவின் பல்வேறு பதவிகளில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 48 ஆகவும் அது அங்கிகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 41 சதவீதம் ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நேரடியாகப் பாதிக்கின்ற 07 பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தற்போதுள்ள பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்கு உரிய கடமைகளை மேவுகை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சியதாக உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 29 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சியதாக காணப்படும் 29 ஊழியர்கள் வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்கு உரிய கடமைகளை மேவுகை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவைக்கேற்ப மேலதிக பதவியணி அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தல்லாத நீதிமன்ற பதிவாளர் பதவிக்காக 05 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் மூலம் அனைத்து நீதிமன்றங்களின் நீதிமன்ற நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் அது தொடர்பான அறிவு மற்றும் அனுபவம் நீதிமன்றப் பதிவாளர்களிடம் உள்ளது. அதன் பிரகாரம் அப் பதவி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்படுவதாகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவையின் பிரகாரம் இப் பதவியணி அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | நீதிமன்ற நிர்வாக செலவு விடயத்தின் மூலம் சம்பளம் வழங்கப்பட்டாலும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படுகின்ற (நியமனம், பதவியுயர்வு, இட மாற்றம் போன்றன) நீதிமன்றங்களில் கடமை புரியும் நீதிபதிகள் மற்றும் ஊழியர்கள் மேற்படி விபரங்களில் உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை. அதன் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் | நீதிமன்றங்களின் நிர்வாகம் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டாலும் நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களின் சம்பளம் நீதி அமைச்சின் செலவு விடயம் (228) இன் மூலம் வழங்கப்படுவதால் நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தில் ஊழியர்களின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான | நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற பதவியணியின் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வைத்திருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை நீதிச்சேவை ஆணைக்குழுவிலிருந்தோ அல்லது நீதி அமைச்சிலிருந்தோ பெறப்படுவதற்கு முடியாதிருந்தது. | ஊழியர்களின் எண்ணிக்கைக்கு நீதிமன்றங்களில் கடமை புரியும் நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற பதவியணி உள்ளடக்கப்படவில்லை. | |

(ஆ) <u>மனித வள அபிவிருத்தி திட்டம்</u>

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கையொப்பமிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தில் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிப்பதற்கு தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |